ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2089/28 - 2018 සැප්තැම්බර් මස 19 වැනි බදාදා - 2018.09.19
*2089/28 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**நாணய விதிச் சட்டம்**

திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்க அமுலாக்கங்களின் 422 ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி,
ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி.

2018, செத்தெம்பர் 19.

ஒழுங்குவிதி "ஈ"

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2013, ஏப்பிறல் 12 ஆந் திகதிய 1805/39 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2013, யூன் 26 ஆந் திகதியிடப்பட்ட 1816/13 ஆம் இலக்க மற்றும் 2015, திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட 1947/39 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்டவாறான ஒழுங்குவிதி "ஈ" 2018, ஒற்றோபர் 16 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :

ஒழுங்குவிதி 2(i) இல், "அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தில் 7.5 சதவீதம்" என்ற இலக்கம் மற்றும் சொற்களை நீக்கி அதற்கு,

(அ) "மோட்டார் வாகன இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லை தேவைப்பாடுகள்" மீதான 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகளின் 100 சதவீதம் ; அத்துடன்

(ஆ) மேலே (அ) தவிர அத்கைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தின் 7.5 சதவீதம்" என்ற இலக்கங்கள் மற்றும் சொற்கள் பதிலீடு செய்யப்படுகின்றது.

ஒழுங்குவிதி 9 இல், பின்வரும் அட்டவணை அ மூலம் அட்டவணை அ பதிலீடு செய்யப்படுகின்றது :

**அட்டவணை அ**

அறிக்கைப் படிவம்

**நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை**

(ரூபா வைப்புப் பொறுப்புக்கள்)

வங்கியின் பெயர் :............................................................................................................. (.....................................................) தொடக்கம்
திகதி

(.......................................................) வரையான காலத்திற்கானது.
திகதி

சேரல் : பணிப்பாளர்,
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட சராசரி வைப்பு பொறுப்புகளின் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு தொழில் நாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவை.

| (i)<br>கேள்வி வைப்புக்கள் | (ii)<br>கால மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii)<br>நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் | (iv)<br>அனைத்து ஏனைய வைப்பு/பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| | | | |

1 வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

....................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது.

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. எல்லைத் தேவைப்பாடுகள் மீதான 2018, செத்தெம்பர் 19 ஆந் திகதிய 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிராக சராசரி நாளாந்த மொத்த ரூபா எல்லை வைப்புகளின் 100 சதவீதம் | |
| 2. நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள் தவிர சராசரி நாளாந்த மொத்த ரூபா எல்லை வைப்பு பொறுப்புகளின் 7.5 சதவீதம் | |
| 3. மேலே (1) மற்றும் (2) இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புகளின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள் | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :------------.

----------------,
உத்தியோகபூர்வ கையொப்பம்.

**குறிப்பு :**

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புகள் மற்றும் இருப்புகள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்துத் தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.

*10-151*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.